2002 ஏப்ரல் 10]

வட்டியையும் சேர்த்து இந்தத் தடவை அந்த settlement-ஐ சமரச settlement-ஐ அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல முதலிலே அறிவித்த அந்த 226 கோடி ரூபாய் வரிச் சலுகை உத்தரவை வழங்குவதற்கு முன் அத்தனை அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசி, விவசாயிகளுக்குச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தின் அடிப்படையிலேதான் அந்த உதவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மிகப்பெரிய கருணையுள்ளத்தாலே செய்யப்பட்டது. இப்போது இந்தத் திட்டம் இரண்டாவது முறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்திலே இதுபோன்ற விவசாயக் கடன்களுக்கு எல்லாம் நபார்டு வங்கியும் கூட்டுறவுத் துறையும் ரிசர்வ் வங்கியினுடைய guidelines-படியேதான் நடக்கவேண்டியிருக்கிற காரணத்தினாலே புரட்சித் தலைவியினுடைய அரசு கருணையுள்ளத்தோடு செய்திருப்பதை விவசாயிகள் பெருமனதோடு ஏற்றுக்கொண்டு பலன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், தி. நகரிலே எங்கே விவசாயிகள் இருக்கிறார்கள்?

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் - வீட்டுக் கடன் பெறும் நடுத்தரக் குடும்பத்திற்குக் கால அளவு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. வினா எண் 117, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

117—

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

***1860—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மடப்பட்டு ஊரை மையமாகக் கொண்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மடப்பட்டை மையமாகக் கொண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

முற்பகல் 10-40

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய வினாவினைத் தொடங்குகின்றேன். திருநாவலூர் தொகுதியைச் சேர்ந்த மற்றும் அதன் அருகிலுள்ள ஏழையெளிய விவசாயிகளும், சிறு வியாபாரிகளும் தற்போது விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை மாட்டு வண்டி மூலமாகவோ, டிராக்டர் மூலமாகவோ எடுத்துச் செல்கிறார்கள். அப்படி எடுத்துச் செல்கின்றபோது அதிகப் போக்குவரத்து நெரிசல் நிறைந்த தேசிய நெடுஞ்சாலை வழியாகச் செல்கின்ற விவசாயிகள் பல்வேறு விபத்துகளுக்குள்ளாகியும், உயிர்ச்சேதம் ஏற்பட்டும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே போக்குவரத்துக்கு வசதியாக உள்ள அந்த மடப்பட்டு கிராமத்தை மையமாக வைத்து திருநாவலூர் தொகுதியினுடைய ஏழையெளிய விவசாயிகள் பயன்பெறும் வகையிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுடைய உயிர்நாடியாக இருக்கின்ற இந்த அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுக்காவைச் சேர்ந்த மடப்பட்டு கிராமம் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்துள்ளது. மடப்பட்டுக்கு மேற்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் திருவெண்ணெய்நல்லூரிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைந்திருக்கிறது. ஆகவே 10 கி.மீட்டர் தூரத்திலேயே ஒரு ஒழுங்குமுறை

2002 ஏப்ரல் 10]

விற்பனைக்கூடம் அமைந்துள்ள காரணத்தினால் மடப்பட்டு கிராமத்தில் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

118—

விவசாயக் கல்லூரி

***8728—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ப. நீலகண்டன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு இந்த ஆண்டில் சுமார் 50 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து குறிப்பாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஆதிதிராவிட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய எதிர்காலத்தை, நலனைக் கருதி தாயுள்ளத்தோடு உத்தரவிட்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை அறிவித்ததற்கு ஆற்காடு தொகுதி மக்களின் சார்பிலும், அனைத்துத் தொகுதி மக்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சார்பிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கேட்காமலேயே வாரி வழங்குகிற தெய்வம். வேலூர் மாவட்டத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வழங்கி இருக்கிறார்கள். மிகவும் ஏழ்மையான ப்ளஸ்-2 படிக்கும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு மிதிவண்டி